**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 - ஆம் நாள் சனிக்கிழமை

TNTV06-000006-2019

**அசல் வழக்கு எண்.16/2019**

மன்னார்குடி நில உரிமையாளர்கள் மற்றும்
விற்பனை ஆலோசகர்கள் சங்கம் அதற்காக
அதன் செயலாளர் கோவிந்தராஜ் மூலமாக .... வாதி

**//எதிர்//**

ஜெய்சங்கர் .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அபினாஷ், B.Sc., L.L.B., அவர்களும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.கலையரசி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் பிரதிவாதி சட்டப்படியான நடவடிக்கை எடுத்து காலி செய்யும்படி பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்தவகையிலும் பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** வாதி சங்கம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 27/1975 பிரிவு 10 ன்கீழ் மன்னார்குடி நகரில் உள்ள நில உரிமையாளர்கள் மற்றும் விற்பனை ஆலோசகர்கள் சங்கம் 2014 ம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் மற்றும் சங்கங்கள் பதிவாளர் முன்பு வரிசை எண்.61/2014 ஆக பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஆகும். வாதி சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கையெழுத்து செய்து வழக்காடவும் எதிர்வழக்காடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**2.2.** வாதி சங்கம் அமைந்துள்ள மன்னார்குடி நகரம், ராஜகோபாலசுவாமி சன்னதித் தெருவில் நகரளவை எண்.1606 ல் 3000 சதுரடி கீழ்நிலம் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானது. அதில் ஏற்கனவே மன்னார்குடி நகரம், பாலகிருஷ்ண நகரைச் சேர்ந்த சோமசுந்தரம் குமாரர் மணி என்கிற சிவசுப்ரமணியன் மேற்கூரை அமைத்து கோயில் வாடகைதாரராக இருந்து வந்துள்ளார். மேற்படி மேற்கூரையை வாதி சங்கத்திற்கு கடந்த 2016 ம் ஆண்டில் அனுபவ மாற்றம் செய்து கொடுத்துள்ளார்.

**2.3.** மேற்படி வாதி சங்கம் தாவா சொத்தில் அலுவலகம் அமைத்து நாகப்பட்டிணம் மாவட்ட பதிவாளர் மற்றும் சங்கங்கள் பதிவாளர் முன்பு அவரது சங்கத்தை பதிவு செய்து பதிவு பெற்ற அலுவலகமாக சங்க அலுவலகம் நடத்தி வரப்படுகிறது. மேற்படி பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது. பிரதிவாதி அசல் வழக்கு எண்.03/2008 என ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்றுள்ளார். மேற்படி எந்த வகையிலும் வாதி சங்கத்தை கட்டுப்படுத்தாது, பிரதிவாதியின்

குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நடந்த பாகப்பிரிவினை வழக்கின் அடிப்படையில் பிரதிவாதி எடுக்கும் நடவடிக்கை வாதி சங்கத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது.

**2.4.** மேற்படி கீழ்நிலத்தை பொறுத்து சொத்தின் உரிமையாளர் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவரும் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானது. பிரதிவாதி குடும்பத்திற்கும், சொத்தின் உரிமையாளரான அருள்மிகு இராஜகோபாலசுவாமி தேவஸ்தானத்திற்கும் இடையே துறைகள் ரீதியாக வழக்கு நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சொத்திற்கு சம்மந்தமில்லாத பிரதிவாதி கடந்த 15.12.2018 ம் தேதியில் சட்டவிரோதமாக வாதி சங்கத்தை காலி செய்ய அடியாட்களுடன் வந்து தகராறு செய்ய முயற்சி செய்துள்ளதால் வாதி சங்கத்தின் செயலாளர் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரை பெற்றுக் கொண்ட காவல் ஆய்வாளர் பிரதிவாதியை அழைத்து விசாரித்து சொத்தில் அவருக்கு உரிமையிருந்தால் உரிமையியல் நீதிமன்றம் மூலம் உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

**2.5.** பிரதிவாதி தொடர்ந்து எப்படியாவது வாதி சங்கத்தின் அனுபவத்தில் உள்ள கடையை சட்டவிரோதமான முறைகளை கையாண்டு வாதி சங்கத்தை அப்புறப்படுத்த பிரதிவாதி முயற்சி செய்து வருகிறார். வாதி சங்கம் தமிழ்நாடு சங்கங்கள் சட்டப்படியான பாதுகாப்பை பெற தகுதியுள்ள சட்டப்பூர்வ பதிவுபெற்ற சங்கம் ஆகும். வாதி சங்கம் நீதிமன்றத்தை அணுகுவதை தவிர வேறு வழியில்லாத காரணத்தால் வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் Due Process of Law படி பிரதிவாதி சட்டப்படியான பிரதிவாதியோ அவரது

ஆட்களோ, முகவர்களோ எந்த வகையிலும் பிரவேசிக்காமல் இருக்கும்பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :-

**3.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது சட்டப்படியும். சங்கதிகள்படியும் நிலைநிற்கக்கூடியதல்ல, பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனையவற்றை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார்.

**3.2.** மேற்படி வழக்கினை தாக்கல் செய்வதற்கு வாதி சங்க செயலாளருக்கு உரிமையில்லை. வாதி சங்கம் சட்டப்படி பதிவு செய்யப்பட்டதும், சட்ட நபராக இருந்து வருவதும் முறையாக புதுப்பிக்கப்பட்டுள்ளதையும் வாதி நிரூபிக்க கடமைப்பட்டவராவார். வாதி சங்கத்திற்காக பிரதிநிதித்துவம் செய்வதற்கும், வழக்கு தாக்கல் செய்வதற்கும் அதன் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதற்கான தீர்மானம் புத்தகம் மற்றும் நிகழ்ச்சி பதிவேடு (Minute Book) எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அனுமதி பெற்ற பிறகு தான் வழக்கினை தாக்கல் செய்ய வேண்டும். அது போல் வாதி சங்கத்தின் செயலாளர் வாதி சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் எப்பொழுது கூட்டப்பட்டது. பொதுக்குழுவில் சங்க உறுப்பினர்கள் எத்தனை நபர்கள் கலந்து கொண்டார்கள், எந்த இடத்தில் கூட்டப்பட்டது. அதற்கான நிகழ்ச்சி பதிவேடு (Minute Book), அதற்கான விபர பட்டியல் (Agenda), தீர்மானங்கள் ஆகியவற்றை வழக்கு தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தில் சமர்ப்பித்து நீதிமன்றத்தில் அனுமதி பெற்று அதன் பிறகு தான் வாதி சங்கத்தின் சார்பாக பிரதிநிதித்துவம் செய்ய இயலும். இந்த வழக்கில் செயலாளர் அதுபோல் நிகழ்ச்சி பதிவேடு, (Minute Book), தாக்கல் செய்யவில்லை, தீர்மான புத்தகம் எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை. பொதுக்குழுகூட்டம் கூட்டப்பட்டதற்கான இடம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எந்த இடத்தில் கூட்டப்பட்டது எத்தனை தீர்மானங்கள்

**3.3.** நிறைவேற்றப்பட்டது அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்காமல் வழக்கினை தாக்கல் செய்ய வாதி சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் செய்வதற்கோ, வழக்கு தாக்கல் செய்வதற்கோ செயலாளருக்கு உரிமையோ, அருகதையோ கிடையாது. அதுபோல் மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் முதல் எடுப்பிலேயே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

**3.4.** இந்த வழக்கின் வாதி வழக்குரையுடன் ஆவணம் 2 சங்க தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்க தீர்மானம் வாதி சங்கத்தின் தன் முகவரி உடைய கடித தாள் கற்றை (Letter pad). ஒன்றில் எழுதப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தீர்மானம் புத்தகம் தாக்கல் செய்யப்பட்டு பொதுக்குழுவில் எத்தனை தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு எத்தனையாவது தீர்மானமாக செயலாளருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் எதுவும் இல்லாமல் வழக்கிற்கு ஏற்ப தீர்மானம் தன் முகவரி உடைய கடித தாளில் எழுதப்பட்டு தலைவர் மட்டும் கையெழுத்து செய்து வழக்கினை தாக்கல் செய்ய இயலாது. பொதுக்குழுவில் கலந்து கொண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் அவர்களுடைய கையெழுத்து உடன் தீர்மான புத்தகத்தில் உள்ள எந்த பக்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நீதிமன்றத்தில் சமர்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும். அது போல் இந்த வழக்கில் எந்தவித தீர்மான புத்தகமோ. நிகழ்ச்சி பதிவேடு, ( Minute Book), தாக்கல் செய்யாமல் தன் முகவரியிட்ட புத்தகத்தை ஒரு பேப்பரில் எழுதி வழக்கினை தாக்கல் செய்ய இயலாது. வாதி எந்த வித ஆவணங்களையும் வழக்கு தாக்கல்

செய்யும் போது முன்னிலைப்படுத்தாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கூறி தன் முகவரியிட்ட ஒரு தாளில் எழுதி வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி பிழையுடையதாகும். இந்த காரணத்திற்காகவும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

**3.5.** வாதி சங்கம் உயிர்ப்புடன் இருந்து வருகிறது என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வாதி வழக்குரையுடன் வ.சா.1 ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தில் 2014-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாதி சங்கத்தின் முகவரி 19.1 வினோபாஜி தெரு, மன்னார்குடி & வட்டம், திருவாரூர் மாவட்டம் - 614001 என்று கூறப்பட்டுள்ளது. சங்க அலுவலக முகவரியாக மேற்படி முகவரியை காண்பித்து விட்டு தற்போது சங்க முகவரியாக வழக்குரையில் கூறியுள்ள முகவரிக்கு எப்போது சங்கம் மாற்றப்பட்டது. அதற்கான ஆவணங்கள் எதுவும் வழக்குரையில் கூறவில்லை. எந்த ஆண்டில் இருந்து சங்கம் வழக்குரையில் கண்ட முகவரியில் இயங்கி வருகிறது என்றும் வழக்குரையில் கூறாமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் சட்டப்படி செல்லக்கூடியதல்ல.

**3.6.** வாதி சங்கம் செயல்படவில்லை இல்லாத சங்கத்திற்கு பொதுக்குழு கூடியது போல் தீர்மானம் ஒன்றினை தன்முகவரியிட்ட தாளில் எழுதி வழக்கினை வாதி சங்க செயலாளர் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். (Ab Initio void ) நகர புல எண் 1606-ல் 3000 சதுரடி அருள்மிரு ராஜகோபாலசாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானது என்பதை வாதி நிருபிக்க கடமைப்பட்டவராவார், அதில் சோமசுந்தரம் குமாரர் மணி என்பவர் வாடகைதாரரராக இருந்து கூரைக்கட்டிடம் அமைத்து இருந்தார் என்பதையும் நிரூபிக்க

கடமைப்பட்டவராவார். மேற்கூரையை வாதி சங்கத்திற்கு 2016-ம் ஆண்டு அனுபவம் மாற்றம் செய்து கொடுத்தார் என்பதற்கு எந்தவித ஆவணமும் வழக்குரையில் தாக்கல் செய்யவில்லை. வாதி உண்மை விபரங்களை மறைத்து போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து சமூகம் நீதிமன்றத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**3.7.** வாதி வழக்குரையில் கூறியுள்ள சோமசுந்தரம் குமாரர் மணி (ஏ) சிவசுப்பிரமணியன் பிரதிவாதியின் தந்தை திரு. முருகையன் அவர்களின் சகோதரர் மகன் ஆவார். திரு.முருகையன் அவர்கள் தனது தந்தையார் சொத்தில் தனக்குரிய பாகவீதத்தினை பிரித்து கொடுக்கும்படி நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 304/1995-ல் மணியின் தந்தையார் சோமசுந்தரம் மற்றும் சகோதரர்கள், சகோதரிகள், தாயார் ஆகியோர்கள் பெயரில் தாக்கல் செய்து 24.04.1998-ல் இந்த பிரதிவாதியின் தந்தையார் முருகையனுக்கு ஆதரவாக முதல் நிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. நாகப்பட்டினம் சார்பு நீதிமன்ற முதல் நிலை தீர்ப்பினை எதிர்த்து மணி (எ) சிவசுப்பிரமணியின் தந்தையார் சோமசுந்தரம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண். 311/1999 தாக்கல் செய்தார். இறுதியாக சென்னை உயர்நீதிமன்றம் 19.10.2011 மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து நாகப்பட்டினம் சார்பு நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து உத்தரவு பிறப்பித்தது. மேற்படி சோமசுந்தரத்தால் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதி தந்தையார் திரு.முருகையன் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி மனு தாக்கல் செய்து அதில் வழக்கறிஞர் ஆணையர் நியமணம் செய்யப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் அவர்கள் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் வாதி வீகிதத்திற்கு ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டம் பிரிக்கப்பட்டு திருவாரூர் மாவட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

பிறகு 2000-ம் ஆண்டில் திருவாரூர் சார்பு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் இருந்து மேற்படி வழக்கு திருவாரூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு புதிய அசல் வழக்கு எண். 213/2000 வழங்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில் பண ஆள்வரை காரணமாக மீண்டும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் 17/2004 வழங்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் 2008-ம் ஆண்டு புதிதாக திருவாரூர் மாவட்ட நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டதால் மீண்டும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து மேற்படி அசல் வழக்கு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.3/2008 வழங்கப்பட்டு அதில் இறுதி நிலை தீர்ப்பாணை இடைநிலை மனு எண்.2/2008, வழங்கப்பட்டு அதில் கடந்த 29.04.2014-ம் ஆண்டு மாவட்ட நீதிமன்றத்தால் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி இறுதி நிலை தீர்ப்பாணை நிலுவையில் இருக்கும் போது சிவசுப்பிரமணியன் தந்தையார் இறந்து விட சோமசுந்தரத்தின் வாரிசான சிவசுப்பிரமணியன் மற்றும் சகோதர சகோதரிகள் வாரிசுகளாக இறுதி நிலை தீர்ப்பாணையில் சேர்க்கப்பட்டு இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இறுதி நிலை தீர்ப்பாணையை அனுசரித்து பிரதிவாதியின் தந்தையார் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண் 54/2014 தாக்கல் செய்து அதில் மாவட்ட நீதிமன்றத்தால் டெலிவரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மாவட்ட நீதிமன்ற ஊழியர்களால் மன்னார்குடி நகரம் கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னிலையில் மன்னார்குடி நகர காவல் துணைக்கண்காணிப்பாளர் முத்துப்பேட்டை காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் ஆகியோர்கள் தலைமையில் தாவா சொத்து மற்றும் பிரதிவாதியின் தந்தையார்

முருகையனுக்கு ஒதுக்கப்பட்ட இதர சொத்துக்கள் அனைத்தும் சோமசுந்தரத்தின் மகன் மணி (எ) சிவசுப்பிரமணியத்திடமிருந்து 06.02.2016-ம் ஆண்டு நீதிமன்றம் ஊழியர்கள் மூலமாக இந்த பிரதிவாதியின் தந்தையாருக்கு வசம் எடுத்து கொடுக்கப்பட்டது. மேற்படி வசம் எடுத்துக் கொடுக்கப்பட்டதை மாவட்ட நீதிமன்றம் 06.03.2016-ம் ஆண்டு ரெக்கார்டு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஊழியர்களால் தயார் செய்துக் கொடுக்கப்பட்ட வசக் கட்டளையில் மன்னார்குடி நகர கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் செய்துள்ளார். வசக்கட்டளையை எதிர்த்து இந்த வழக்குரையில் வாதியால் குறிப்பிடப்பட்டுள்ள சோமசுந்தரம் மகன் சிவசுப்பிரமணியனால் கொடுக்கப்பட்ட ஆட்சேபனைகள் அனைத்து மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு. வசக்கட்டளை ரெக்கார்டு செய்யப்பட்டுள்ளது. சிவசுப்பிரமணியத்திடமிருந்து தாவா சொத்து முறையாக நீதிமன்றம் மூலம் இந்த பிரதிவாதியின் தந்தையார் முருகையன் அவர்களால் சட்டப்படி வசம் எடுக்கப்பட்ட பிறகு மணி (ஏ) சிவசுப்பிரமணியன் அனுபவம் மாற்றம் செய்து கொடுத்துள்ளதாக வழக்குரையில் கூறியுள்ளது சட்டப்படி செல்லக்கூடியதல்ல. வாதியால் மேற்படி அனுபவம் மாற்றம் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எப்போது அனுபவம் மாற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து வழக்குரையில் முன்னுக்கு முரணாக வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிய வருகிறது. இந்த பிரதிவாதி தந்தையார் நீதிமன்றம் மூலம் வசம் எடுத்த காலத்தில் இருந்து தாவா சொத்தினை அனுபவம் செய்து வருகிறார். உண்மை இவ்வாறு இருக்க இந்த பிரதிவாதி சிவசுப்பிரமணியனிடமிருந்து அனுபவம் மாற்றம் செய்ததாக வழக்குரையில் கூறியுள்ளது சட்டப்படி செல்லக்கூடியதல்ல.

**3.8.** பிரதிவாதியின் தந்தையார் முருகையன் அவர்கள் பாகப்பிரிவினை மூலம் முதல் நிலை தீர்ப்பாணை பெற்று பின்னிட்டு 21 ஆண்டு கால சட்ட போராட்டத்திற்கு பின்பு அனைத்து நீதிமன்றங்களிலும் பிரதிவாதியின் தந்தையார் முருகையன் அவர்கள் வெற்றி பெற்று மாவட்ட நீதிமன்றம் மூலம் தாவா சொத்தினை வசம் பெற்றுள்ளது வாதி சங்க செயலாளருக்கு வழக்குரை சங்கதிகளிலிருந்து தெரிய வருகிறது. தாவா சொத்து நீதிமன்றம் மூலம் வசம் எடுத்தது தன்னை கட்டுப்படுத்தாது என்று வழக்குரையில் கூறியுள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. வாதி சங்கம் வழக்கில் தரப்பினர் அல்ல என்ற கட்சியும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல. வாதிக்கு அனுபவம் கொடுத்ததாக கூறும் நபரிடமிருந்து சட்டம் மூலமாக அனுபவத்தை பெற்ற பிறகு மேற்படி மணி (எ) சிவசுப்பிரமணியம் அனுபவம் மாற்றம் செய்து கொடுத்ததாக கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அதற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிலைப் படுத்தப்படவில்லை. வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமும். தொடர்பும் இல்லாதவையாகும். அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக தற்போது போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகும்.

**3.9.** வாதி உண்மை விபரங்களை தெரிந்து கொண்டும், உண்மையை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றும் வகையில் சிவசுப்பிரமணியன் தூண்டுதலின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. அனைத்து நீதிமன்றங்களில் தோல்வியுற்ற சிவசுப்பிரமணியன் பிரதிவாதியின் தந்தையை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து வாதி சங்கத்திற்கு பின்புலத்தில் இருந்து கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**3.10.** வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வடிகட்டிய பொய்யானதாகும். இந்த பிரதிவாதி குடும்பத்திற்கும், ராஜகோபால் ஆலயத்திற்கும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எந்தவித வழக்கும் கிடையாது. வாதி வழக்குரையில் கூறியுள்ளபடி 15.12.2018-ம் தேதி எவ்விதமான சம்பவமும் நடைபெறவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறுவதும் தவறானதாகும். வாதி சங்க நிர்வாகிகள் தங்கள் அரசியல் செல்வாக்கு மற்றும் பணபலத்தினை கொண்டு காவல் நிலையத்தில் இருந்து ரசீது பெற்றுள்ளார்கள். சட்டப்படியாக நீதிமன்றம் மூலம் வசம் எடுத்த சொத்தினை பிரதிவாதியின் தந்தையாரின் அனுபவத்தில் இருந்து தாவா சொத்தினை சட்டப்புறம்பான முறையில் அபகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் போலியாக ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலர் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமலும் முன்பு நடந்த நிகழ்வுகளை தெரிந்து கொள்ளாமலும், கிராம நிர்வாக அலுவலர் முன்னின்று நீதிமன்ற ஊழியர்கள் வசம் எடுத்து கொடுத்து வசக்கட்டளையில் கையெழுத்து செய்த பிறகு அதற்கு முரணாக சான்று வழங்கியுள்ளது சட்டப்படி செல்லக்கூடியதல்ல. கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்குவதற்கும் உரிமை கிடையாது. வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். தாவா சொத்திற்கும் ஆவணங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. இந்த வாதி சங்கம் எந்த காலத்திலும் தாவா சொத்தில் அனுபவம் செய்தது கிடையாது.

**3.11.** வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் கற்பனையானதாகும். தவறானதாகும். வாதி அனுபவமே இல்லாத சொத்தில் சட்டப்படி அகற்றப்பட வேண்டும் என்று பரிகாரம் கேட்க இயலாது. வாதி சங்கம் இந்த பிரதிவாதியின் தந்தையாரிடமோ, பிரதிவாதியிடமோ

அனுபவம் வந்ததாக கூறி எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வழக்குரையிலும் கூறவில்லை. வாதி உண்மை விபரங்களை மறைத்து போலியாக ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா சொத்தில் வாதி அனுபவத்தில் உள்ளதாக ஒரு கபட தோற்றத்தை நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் எவ்வித முகாந்திரமும் இன்றி இந்த பிரதிவாதியை பழிவாங்க வேண்டும் அலைக்கழித்து துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். வழக்கிற்கு தேவையான, அவசியமான தரப்பினரை வாதி வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

**3.12.** ஆகவே வாதி உண்மைவிபரங்களை மறைத்தும், சட்ட முறையில் நீதிமன்றம் மூலமாக பிரதிவாதியின் தந்தையார் வசம் எடுத்த சொத்தினை பிரதிவாதியின் தந்தையாரிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிவசுப்பிரமணியன் தூண்டுதலின் அடிப்படையில் வாதி சங்க செயலாளாலரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**<u>வழக்கெழுவினாக்கள் ;-</u>**

1. வாதி தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளாரா?
2. வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதுதானா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

5) **<u>இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள்</u> :-**

வாதி தரப்பில் வாதி கோவிந்தராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி ஜெய்சங்கர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்ற அலுவலக உத்தரவு எண்.07/2026, நாள் 16.04.2026 உத்தரவின்படி 17.11.2022ம் தேதியன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை மூலம் மாவட்ட பதிவாளர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் உள்ள கையெழுத்து பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டதை பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6) **<u>வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u> :-**

வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் இருப்பதை பிரதிவாதி இடையூறு செய்வததை வாதியானவர் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதி கோருகின்ற பிரதிவாதி சட்டப்படியான நடவடிக்கை எடுத்து காலி செய்யும் வரை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக கிடைக்கதக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

7) **<u>பிரதிவாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u> :-**

தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் இல்லை என்றும், பிரதிவாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பதை பிரதிவாதியானவர் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை

பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) **தீர்வு** :-

**எழுவினா -1 மற்றும் எழுவினா - 2- க்கான தீர்வுகள்** :-

i) வாதி தாவா சொத்தில் உடமையிலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா? என்பது குறித்து பரிசீலிக்கையில், " திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரம், இராஜகோபாலசுவாமி சன்னதி தெருவில் நகரளை எண்.1606-ல் 20 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட கூடுதல் சதுரடி 200 அதிலுள்ள மேற்கூரையுடன் கூடிய கட்டிட வளாகம்" தாவா சொத்தானது உள்ளது என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி கோவிந்தராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 23.05.2014 ம் தேதியிட்ட வாதி சங்கம் நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 19.12.2018 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட தீர்ப்பு சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 10.12.2018 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான நகரளவை பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 18.12.2018 ம் தேதியிட்ட புகார் மனு ஏற்பு ரசீது அசல வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 26.09.2018 ம் தேதியிட்ட நில உரிமையாளர் மற்றும் விற்பனை ஆலோசகர் சங்கத்தின் பொதுக்குழுவின் தீர்மானம் சான்று நகல் வா.சா.ஆ.5

ஆகவும், கடந்த 25.03.2014 ம் தேதியிட்ட சங்கத்தின் குறிப்பாணை மற்றும் பைலா வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 10.01.2018 ம் தேதியிட்ட புகைப்படம் 2 எண்ணிக்கை, குறுந்தகடு மற்றும் ரசீது கோர்வை வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 03.01.2019 ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய இருப்பிடச்சான்று அசல் வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 15.12.2012 ம் தேதியன்று வாதி மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.9 ஆகவும், கடந்த 23.12.2018 ம் தேதியன்று மனுதாரரர் சங்கத்தில் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அசல் வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iv) பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக பிரதிவாதி ஜெய்சங்கர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக நிறைவேற்று மனு எண்.54/2014 ல் அடிப்படையில் தாவா சொத்தை நீதிமன்ற ஊழியர்கள் வசப்படுத்தியதற்கான கட்டளை மற்றும் கணக்கு விவரங்கள் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆகவும், கடந்த 29.04.2014 ம் தேதியன்று திருவாரூர் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.03/2008 ல் இடைநிலை மனு எண்.02/2008 ல் வழங்கிய இறுதி நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 ஆகவும், கடந்த 06.02.2016 ம் தேதியன்று திருவாரூர் மாவட்ட நீதிமன்ற நிறைவேற்று மனு எண்.54/2014, அசல் வழக்கு எண்.03/2008 நீதிமன்ற ஊழியர்களின் வசக்கட்டறை மற்றும் இன்வெண்டரி கணக்கு விபரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3 ஆகவும், கடந்த 25.05.1955 ம் தேதியன்று எதிர்மனுதாரரின் பாட்டனார் ராஜவிநாயகம் பிள்ளைக்கு தங்கவேல் பிள்ளை எழுதி கொடுத்த கிரய சாசனம் ஆவண எண்.2377/1955 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4 ஆகவும், முருகையன் பெயரில் உள்ள மன்னார்குடி நகராட்சி வரி ரசீது அசல் பி.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்ற அலுவலக உத்தரவு எண்.07/2026, நாள்

16.04.2026 உத்தரவின்படி 17.11.2022 ம் தேதியன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை மூலம் மாவட்ட பதிவாளர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் உள்ள கையெழுத்து பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டதை பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

v) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியின் சங்கமானது 23.05.2014 ம் தேதியன்று நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு சான்றிதழ் அசல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாதியின் சங்கமானது பதிவு செய்யப்பட்ட சங்கம் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ-2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற இ.ம.எண்.02/2008 - அசல் வழக்கு எண்.03/2008 வழக்கின் தீர்ப்பின் சான்றிட்ட நகல் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட தீர்ப்பின்படி தாவா சொத்தானது தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் பிரதிவாதியின் தந்தை முருகையன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதற்கான இறுதிநிலை தீர்ப்பாணையின் நகல் என்பதும் தெரிய வருகிறது. மேற்கண்ட ஆவணத்தையே பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணப்படி தாவா சொத்தினை பிரதிவாதியின் தந்தை முருகையனுக்கு நீதிமன்ற அமீனா மூலம் ஒப்படைக்கப்பட்ட உத்தரவு என்பது தெரிய வருகிறது.

vi) வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்திற்கான நகரளவை பதிவேடு என்பதும், தாவா சொத்தானது அருள்மிகு ராஜகோபாலசாமி திருக்கோயில் தற்கால நிர்வாகி உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.5 ஆவணமானது தாவா சொத்தில் பிரதிவாதியின் தகப்பனார் முருகையன் அனுபோகத்தில் இருந்து வருகிறது

என்பதற்கான மன்னார்குடி நகராட்சியால் வழங்கப்பட்ட வரி ரசீது என்பது தெரிய வருகிறது. பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.6 ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமான வா.சா.ஆ.3 ஆவணமானது அருள்மிகு ராஜகோபால சுவாமியின் உரிமையாளர் என்று நகரளவை பதிவேட்டில் குறிப்பிட்டிருந்தாலும் வாதியை தாவா சொத்தில் வாடகைதாரராக மணி என்கிற சுப்ரமணியனுக்கு பாத்தியப்பட்டது என்றோ அல்லது அவரது அனுபோகத்தில் உள்ளது என்றோ எந்தவித ஆவணத்திலும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையிலும் தாவா சொத்தானது பிரதிவாதியின் தந்தை முருகையனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் தாவா சொத்தினை பொறுத்து முருகையனோ, அல்லது வாதி தரப்பில் கட்சி செய்தவாறு அருள்மிகு ராஜகோபால சுவாமி கோயில் உரிமையாளரிடமிருந்தோ வாதியானவர் அலுவலகம் வைத்துக்கொள்ள சட்டப்படி வாடகைதாரராக இருந்தார் என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை.

viii) தாவா சொத்தில் வாதியானவர் வாடகைதாரராக வந்து அவர் அனுபோகத்தில் இருப்பதாக கட்சி செய்யும் சூழலில் மேற்படி தாவா சொத்தில் சட்டப்படி வாடகைதாரராக உள்ளார் என்றோ, தாவா சொத்திற்கான வாடகையை நாளது தேதி வரை செலுத்தி வருகிறார் என்றோ எந்தவித ஆவணத்தையும் வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், தாவா சொத்தில் வாதியானவர் அலுவலகம் நடத்தி வருகிறார் என்பதும், அந்த சங்கத்தின் பொதுகுழுவில் தீர்மானிக்கப்பட்ட தீர்மான சான்று வா.சா.ஆ.5 மற்றும்

வா.சா.ஆ.10 ஆகவும், அந்த சங்கத்தின் குறிப்பாணை வா.சா.ஆ.6 ஆகவும் தாவா சொத்தில் வாதியானவர் அலுவலகம் அமைந்து அவரது அனுபோகத்தில் உள்ளது என்பதற்கான போட்டா மற்றும் சி.டி வா.சா.ஆ.7 ஆகவும், மேற்படி அலுவலகத்தில் வாதியின் சங்கம் இயங்கி வருகிறது என்று கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று வா.சா.ஆ.8 என்பதும் தெரிய வருகிறது.

ix) மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து வாதியின் சங்கம் செயல்பட்டு வருவதாக வாதம் செய்தாலும், மேற்படி வாதியின் சங்கமானது பிரதிவாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் செயல்படுவதற்கு எந்தவித உரிமையும் வாதிக்கு இல்லை என்பது தெரிய வருகிறது. மேலும், வாதியின் சங்கத்தை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற பிரதிவாதி இடையூறு செய்வதாக சொல்லி மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.

x) வாதியின் கட்சிப்படி தாவா சொத்தானது அருள்மிகு ராஜகோபால சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமாக இருந்து அதில் வாடகைதாரராக சோமசுந்தரம் குமாரர் மணி என்கிற சுப்ரமணியனுக்கு கொடுக்கப்பட்டு அதில் மேற்கூரையை வாதி சங்கத்திற்கு 2016 ம் ஆண்டில் அனுபோகம் மாற்றம் செய்து கொடுத்தார் என்று கட்சி செய்தும், மேற்படி மணி என்பவர் வாதியின் சங்கத்திற்கு அனுபோகம் மாற்றம் கொடுத்தார் என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், இது குறித்து வாதியை பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்தபோது, **“ஒரு வாடகைதாரர் எப்போதும் வாடகைதாரரே என்று சொன்னால் சரிதான். ஒரு வாடகைதாரர் உரிமை மூலத்தை**

**எப்போதும் கேள்வி எழுப்ப இயலாது என்று சொன்னால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xi) இந்நிலையில் வாதியின் கட்சியின்படி வாதி சங்கத்திற்கு வாடகைதாரர் உள் வாடகைதாரராக ஒப்படைக்க சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும், தாவா சொத்தின் வாதி செயல்பட்டு வரும் அலுவலகமானது சட்டப்படி உரிய அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இல்லை என்பது பிரதிவாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்தில் அனுபோகத்தில் இருப்பதை இடையூறு செய்ய முடியாது என்ற பரிகாரம் கோரமுடியாது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

xii) ஆகவே, தாவா சொத்தில் வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் இருந்தாலும் வாதி கோருகின்ற தாவா சொத்தில் பிரதிவாதி சட்டப்படியான நடவடிக்கை எடுத்து காலி செய்யும்படி பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்தவகையிலும் பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என எழுவினா-1 மற்றும் எழுவினா-2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

9) **எழுவினா-3 க்கான தீர்வு** :-

வாதி கோருகின்ற பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எழுவினா-3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**10) முடிவில்,**

1. தாவா செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.18 17:58:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சி** :-

வா.சா.1 திரு.கோவிந்தராஜ் (வாதி சங்கத்தின் செயலாளர்),
த/பெ. தர்மலிங்கம்.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.05.2014 | 23.05.2014 ம் தேதியிட்ட வாதி சங்கம் நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் சான்று நகல். |
| வா.சா.ஆ.2 | 19.12.2018 | 19.12.2018 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட தீர்ப்பு சான்று நகல். |
| வா.சா.ஆ.3 | 10.12.2018 | 10.12.2018 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான நகரளவை பதிவேடு உண்மை நகல். |
| வா.சா.ஆ.4 | 18.12.2018 | 18.12.2018 ம் தேதியிட்ட புகார் மனு ஏற்பு ரசீது அசல். |
| வா.சா.ஆ.5 | 26.09.2018 | 26.09.2018 ம் தேதியிட்ட நில உரிமையாளர் மற்றும் விற்பனை ஆலோசகர் சங்கத்தின் பொதுக்குழுவின் தீர்மானம் சான்று நகல். |
| வா.சா.ஆ.6 | 25.03.2014 | 25.03.2014 ம் தேதியிட்ட சங்கத்தின் குறிப்பாணை மற்றும் பைலா. |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 10.01.2018 | 10.01.2018 ம் தேதியிட்ட புகைப்படம் 2 எண்ணிக்கை, குறுந்தகடு மற்றும் ரசீது கோர்வை. |
| வா.சா.ஆ.8 | 03.01.2019 | கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய இருப்பிடச் சான்று அசல். |
| வா.சா.ஆ.9 | 15.12.2018 | வாதி மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல். |
| வா.சா.ஆ.10 | 23.12.2018 | வாதி சங்கத்தில் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அசல். |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** :-

| | |
|---|---|
| பி.சா.1 | திரு.ஜெய்சங்கர் (பிரதிவாதி) , த/பெ. முருகையன். |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | -- | நிறைவேற்று மனு எண்.54/2014 ல் அடிப்படையில் தாவா சொத்தை நீதிமன்ற ஊழியர்கள் வசப்படுத்தியதற்கான கட்டளை மற்றும் கணக்கு விவரங்கள் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | 29.04.2014 | திருவாரூர் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.03/2008 ல் இடைநிலை மனு எண்.02/2008 ல் வழங்கிய இறுதிநிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.3 | 06.02.2016 | திருவாரூர் மாவட்ட நீதிமன்ற நிறைவேற்று மனு எண்.54/2014, அசல் வழக்கு எண்.03/2008 நீதிமன்ற ஊழியர்களின் வசக்கட்டளை மற்றும் இன்வெண்டரி கணக்கு விபரம் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.4 | 25.05.1955 | எதிர்மனுதாரரின் பாட்டனார் ராஜவிநாயகம் பிள்ளைக்கு தங்கவேல் பிள்ளை எழுதி கொடுத்த கிரய சாசனம் ஆவண எண்.2377/1955 சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.5 | -- | முருகையன் பெயரில் உள்ள மன்னார்குடி நகராட்சி வரி ரசீது அசல். |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.6 | -- | 17.11.2022 ம் தேதியன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை மூலம் மாவட்ட பதிவாளர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் உள்ள கையெழுத்து. |

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.18 17:58:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.